PRIVATE AND CONFIDENTIAL (for members only)

# AMERICAN MISSION COLLEGE, UDUPPIDDY.

LIGHT DISPELS DARKNESS

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

1994-08-28 ஞாயிறு காலை 9 மணிக்கு

கல்லூரி மேல்மாடிக் கட்டிடத்தில் நடைபெறும்

வருடாந்தப் பொதுக்கூட்டத்தில்

சமர்ப்பிக்கப்படவுள்ள 05 வரு

# ஆண்டறிக்கை

## 1993 - 1994

ஸ்ரீவாணி அச்சகம்–உடுப்பிட்டி

## 1993—1994-ம் ஆண்டுகளுக்கான தாய்ச்சங்க நிர்வாகசபை உத்தியோகத்தர்கள்

தலைவர் : பேராசிரியர் அ. துரைராசா
உப தலைவர்கள் : திரு. க, சிதம்பரப்பிள்ளை
கலாநிதி சி, சிறிசற்குணராசா
செயலாளர் ; திரு, சி, கனகசபாபதி
உப செயலாளர் ; செல்வி சீ, வேலுப்பிள்ளை
பொருளாளர் ; திரு, ச, தில்லையம்பலம்
உறுப்பினர்கள் : திருவாளர்கள் வே, தவேஸ்வரன்
பொ, வியாகேசு தி, யோகசாமி
இ, பொன்னம்பலம் மு, தங்கராசா
வை. மகாதேவன்

போஷகர் : திரு. ந, அனந்தராஜ் (அதிபர்)
கணக்குப் பரிசோதகர் ; திரு, த, அபூர்வசிங்கம்

## 1993—1994-ம் ஆண்டுகளுக்கான கொழும்புக் கிளைச் சங்க நிர்வாகசபை உத்தியோகத்தர்கள்

தலைவர் : Dr. R. மகாலிங்கசிவம்
உபதலைவர்கள்; திரு E. பஞ்சநாதன்
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. S. தில்லைநடராசா
செயலாளர் : திரு. R. முத்துரத்தினானந்தன்
உபசெயலாளர் : திரு A. தளையசிங்கம்
பொருளாளர் : திரு. V மகாதேவன்
உபபொருளாளர் : திரு. M. கணபதிப்பிள்ளை
உறுப்பினர்கள் ; திருமதிகள் V. செல்வரட்ணம்
K சண்முகராஜா K, துரைராசா
திருவாளர்கள் G, பரம்சோதி E, ஈஸ்வரலிங்கம்
V, நவரட்ணம் S. இராசதுரை T. சிவநாதன்
R, மனோகரன் S குஞ்சிதபாதம் Dr. T. உமாபதிசிவம்

1994—1995-ம் ஆண்டுக்கான கனடா கிளைச்சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள் விபரம் கிடைக்காமையால் பிரசுரிக்கவில்லை.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

அமரர் பேராசிரியர்

# அ. துரைராசா அவர்கள்

# நினைவஞ்சலிக் கூட்டமும்

# 6-வது வருடாந்த பொதுக்கூட்டமும்

இடம் : பழைய கல்லூரி மாடிக் கட்டிடம்

காலம் : 1994 08-28 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி.

தலைவர் : கலாநிதி சி. சிறிசற்குணராசா அவர்கள்.

## நினைவஞ்சலி நிகழ்ச்சிகள்.

1. மங்கள விளக்கேற்றல்
2. பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் ஞாபகார்த்த பெயர் சூட்டலும் அன்னாரின் உருவப்படம் திரை நீக்கம் செய்தலும்
3. நினைவஞ்சலி உரை
4. உபசரணை

## பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. ஐந்தாவது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை
4. பொருளாளர் வரவு- செலவு அறிக்கை
5. 93-06-01 — 94-06-30 வரையிலான ஆண்டறிக்கை
6. அதிபர் உரை
7. புதிய ஆண்டிற்கான உத்தியோகத்தர் தெரிவு
8. புதிய ஆண்டிற்கான செயல்திட்டம் தயாரித்தல்
9. வேறு விடயங்கள்
10. நன்றியுரை

*உடு. அமி. கல்லூரி,*
*பழைய மாணவர் சங்கம், உடுப்பிட்டி*
*1994-08-10*

சி. கனகசபாபதி
*செயலாளர்.*

# இதய கண்ணீர் அஞ்சலி

உங்கள் ஆத்மா சாந்திபெற,
உயருலகில் அமைதிபெற
இறைவனுடன் கலந்துய்ய,
எமதினத்து சார்பாக,
பேரறிஞர் பெருமனிதர் சார்பாக,
நினைவாக
இறைவனையே வேண்டுகிறோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

உ. டு. அ. மி. கல்லூரிப்
பழைய மாணவர்

எம் தலைவர்

பேராசிரியர் அ. துரைராசா அவர்கள்





# எம் தலைவராம் துரைராஜருக்கு எம் கவிதாஞ்சலி.

உதித்தநின் னூரழப் பேரழக் கற்றகல் லூரியழ
மதித்த பழையமா ணாக்கர்தம் சங்கம் வருந்தியழக்
கதித்தநின் னண்பர் குழாமழக் கற்றவர் காசினியோர்
துதித்த துரைராஜ னாமுப வேந்தெங்குச் சூழ்ந்தனையே

பேர்புக ழாருடுப் பிட்டிக்கு மேலும்
பேர்புக ழீட்டிய பெருந்தவச் செல்வம்
அகில வுலகிலும் அமெரிக்கன் கல்லூரியின்
புகழ்நிலை பெறச்செய் பொன்மலை மேரு
காண்கலை பயிற்றிக் களித்தவா சிரியரை
மாணிறை யெனத்தொழு மாணவ ரத்தினம்
ஒருங்கு பயின்றுள முவந்த மாணவர்க்
கருங்கலைச் சுகவள மாக்கிய தண்பொழில்
வாய்த்தஎம் பழைய மாணவர் சங்கங்
காய்த்த மரமெனக் காட்டிய நாயகம்
சாம்பற் குவியலாய்ச் சாய்ந்தஎம் கல்லூரிக்
காம்பணி செய்துயர் வாக்கிய நற்றுணை
பெற்ற தாயெனப் பிறந்த வூரினை
யுற்றவுள் ளுணர்சியா லோம்பபி மானம்
கணித மேதையர் கவின்பெறு வரிசைக்
கணிதந் திலங்கிய அரியமா மேதை
செறிவள மெலாந்தரு பொறியியற் றுறையுள
அறிஞர் குழாங்களி னகத்தொளிர் தீபம்
மண்பொறி யியலதாய் வளர்துறை யாய்வினால்
எண்ணரும் புதுமைகள் பண்ணிய வித்தகம்
கல்வி யுலகினுக் கெல்லையில் வளமெலாம்
நல்கி யொளிர்ந்த நல்வயி ரத்தூண்
அளவிறந் தணுகிடு மாரெவ ருளத்தும்
உளமனக் கருத்தறி உளவியற் பொக்கிஷம்
கணநொடிப் பொழுதினிற் கணிக்கொணா மதிக்கூர்க்
கணனயு மொதுங்கிக் கைபிசை கணனி
அற்புத மற்புத மாவெனக் கற்றவர்
அற்புதங் கொளச்செய் யறிவுச் சுரங்கம்

சிந்தனைக் குவையாஞ் செழுமணி முத்தினை
அந்தமி லாதெறி யலைக்கரத் தரங்கம்
கலைவகை யனைத்தின் களைகணாய் மேவி
நிலைபெற விளக்கிய நிகரிலா அரங்கம்
அறிவரு நிதிப்பே ராசிரி யர்துதி
செறிதகைப் பேரா சிரிய திலகம்
அரும்பெரு வளர்ச்சி யாக்க மெலாந்தரு
பெரும்புகழ்ப் பொறியியற் பீடத் ததிபதி
வாழ்வளாக மாக யாழ்வளா கம்வர
வாழ்வையர்ப் பணித்த மதியுப வேந்து
போற்றிடு பழமையும் பொருந்துசீர்ப் புதுமையும்
ஏற்றநல் விதத்தி லிணைந்த சங்கமம்
பார்த்தவ ரொன்றிப் பழகிக் குலாவியோர்
வார்த்தையற் றவராய் மயங்கிய தாமரை
தாழ்வு முயர்வுஞ் சற்றும் பார்த்திடா
வாழ்வு காட்ட வந்தமா ணிக்கம்
தயக்கமில் லாமற் சரியெனக் கண்டதைச்
செயற்படுத் திநின்ற திறற்றுணி விருப்பிடம்
உள்ளவ ரிலாதவ ருற்றவர் பிறரென்
றெள்ள வுஞ்சயன் இறாத தராசு
சற்குண மேலோர் சான்ற பண்பினர்
பொற்புறப் போற்றிப் புகழ்குண பூஷணம்
பட்டமும் பதவியும் படைக்குமவ் வகந்தையை
எட்டவொதுக்கிய எளிமையின் நிலைக்களம்
இதயம் சொல்செய லிவற்றினா லென்றும்
உதவிநீர் வழங்கிய ஒப்பிலா வூருணி
கள்ளங் கபடங் கரவிலா தன்பு
வெள்ளம் பொருக்கி விரிந்த கங்கை
உடலுறு நோயினால் உளம்மதி கெடாமற்
கடமையைப் புரிந்த கரும யோகம்
கோமக னெனாமற் குடிமக னாகி
மாமக னாகிய மனிதத் தெய்வம்
மரண முடிவினைத் திரணமாய் மதித்ததை
வரவேற் றுவந்த வுரத்திடப் பக்குவம்
ராஜாதி ராஜரா யிப்புவி யுற்றவர்
'ராஜா' வெனப்பணி எம்துரை ராஜனே.

— ஒருங்குகற்ற சகபாடி

# எம் தலைவரும் அ. மி. கல்லூரியும்

அழகையா துரைராஜா! ஆம்; அவர் அமரராகிவிட்டார். நாமெல்லோரும் மரர்; மரிப்பவர்கள்; அன்றியும் மரங்கள் அங்கத் தேவையற்றவர்கள். ஆகவே இங்கும் இன்னும் இருக்கின்றோம். அவர் அங்கு அவசியந் தேவைப்பட்டார். அழைக்கப்பட்டார். மரணத்திரையின்பின் மறைந்தார். மரித்தும் மரியாதவராகவேயுள்ளார். எல்லோரது பேச்சும் அவர்பற்றியதே. அவர் இன்றும் வாழ்கிறார். என்றும் வாழ்ந்துகொண்டிருப்பார்.

அவர் பிறந்த மண் உடுப்பிட்டி மண் தவழ்ந்தமண்; தளர் நடை போட்டமண்; தள்ளாடி விழுந்தமண்; எல்லாம் உடுப்பிட்டி மண்தான். தள்ளாப்பராயம் வந்து தள்ளாடி விழாத மண்ணாய் விட்டது. இந்த உடுப்பிட்டிமண். அவர் வெந்த மண்ணாகியும் விடவில்லை இந்தமண். அவர் சொந்தமண் இதை விரும்ப வில்லைப் போலும்!

அவரின் ஆரம்பப் படிப்பு உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் (அக்காலம் அது உடுப்பிட்டி ஆங்கிலக் கலவன் பாடசாலையென அழைக்கப்பட்டது) ஆரம்பமானது திரு கே. ரீ. ஜோன் அதிபராய் இருந்த காலம் அது அக்காலம் அவர் பெற்றது ஆங்கில மொழி மூலக் கல்வி. தமிழ் ஒன்று தான் தமிழில், ஏனைய பாடங்கள் எல்லாம் ஆங்கிலத்தில்.

மெல்லிய ஒல்லியான தோற்றம் வாய்ந்தவராக அவர் இருந்தார். அகத்தினழகு முகத்திற் தெரிந்தது; பிரமை குன்றாத முகம் என்றும் இருந்தது. கடைசிவரையும் அது மங்கவில்லை.

படிப்புச் சுமாராக போய்க்கொண்டிருந்தது. வகுப்பேற்றமுந் தடைப்படவில்லை. *Prep. S Sc* யிலேயே கலைப்பிரிவு விஞ்ஞானப் பிரிவு என வந்துவிட்டது. துரை விஞ்ஞானப் பிரிவைத் தெரிந்து கொண்டார். அவர் ஆற்றல் பிரகாசிக்கத் தொடங்கியது. இடக்கை, வலக்கையாக நிற்கக்கூடிய வேறு மாணவரும் அவ்வகுப்

பிலிருந்தனர். எனினும் துரையே பெரும்பாலும் உச்சப் புள்ளி களைப் பெறுவார். கணிதம் (*Mathematics*) என்றால் பேசத் தேவையில்லை. துரைக்குத்தான் ஆகக் கூடிய புள்ளிகள் கிடைக் கும். பரீட்சை வினாக்களிலே தெரிவுச்சலுகையிருக்கும், இவர் இந்தச் சலுகையை உபயோகிப்பதில்லை. ஒன்று, இரண்டு, மூன்று என்ற வரிசையிலேயே விடைகளை எல்லோருக்கும் முன் எழுதி விடுவார். எத்தனை வினாக்களுக்கு விடை வேண்டுமோ அத்தனை க்கும் விடை எழுதப்பட்டுவிடும். எல்லோருக்கு முன்னமே விடைத் தாள்களை ஒப்படைத்துவிட்டு வெளியேறலாம். அவர் அப்படிச் செய்வதில்லை. எஞ்சியிருக்கின்ற நேரத்துக்கு மிகுதிக் கணக்குகளை யும் செய்து விடுவார். செய்துமுடித்த பின்னரே மண்டபத்தை விட்டு வெளியேறுவார்.

அன்றும் அவர் சாந்த சுபாவம் வாய்ந்தவராக இருந்தார். எவரோடும் சோலி சுரட்டுக்குப் போனதில்லை. விளையாட்டுத் துறையில் அவ்வளவு நாட்டங் கொள்ளவில்லை. பொழுதுபோக் காகக் கரப்பந்தாட்டத்திலும் காற்பந்தாட்டத்திலும் ஈடுபடுவார். கரப்பந்தாட்ட அடிகள் நிதானமானவையாக இருக்கும் எனினும் பாடசாலை விளையாட்டணிகள் எதிலும் இடம் பெறவில்லை. ஆனாலும் விளையாட்டு மைதானத்துக்குத் தவறாது வருவார். உரிய நேரத்திலேயே வீடுதிரும்புவார். பின் படிப்புத்தான்.

அவர் வீட்டுக்கு அயலிலுள்ள கோவில்களில் நடைபெறும் கூத்துக்களைக்- காத்தவராயன்- பூதத்தம்பி, வாளபிமன்- பார்க் கத் தவரமாட்டார். அவைகள் எல்லாம் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. சிரேஷ்ட தராதரப் பிரிவிற் கற்றுக் கொண்டிருந்த காலக்கதையிது. மதியஉணவு இடைவேளையில் வீடுசென்று உணவு உட்கொண்டு வேளைக்கே பாடசாலைவந்து விடுவார். இவரது வீடு பாடசாலையிலிருந்து சிறிது தூரத்தில்.

இந்த நேரத்தில் வகுப்பறையில் அந்த நாடகங்கள் நடை பெறும். ஏனைய சகபாடிகளும் சேர்ந்து கொள்வர். துரை 'காத்தா' னானால் இன்னொருவர் 'தொட்டியத்துச் சின்னா, னாய் நிற்பார். பாத்திரத்துக்கேற்ப நடிப்பு நடை அருமையாய் அமையும். பாட்டு- தொம்மாங்கு மெட்டு- வெகு ஜோராயிருக்கும்.

ஒளித்து வைத்திருக்கும் தகரடப்பி உடுக்காகும். பூதத்தம்பி நாடகமென்றால் ஆசிரிய மேசையோ அன்றி மாணவர் மேசையோ மத்தளாமாகும். மத்தள அடியால் அவை ஒரு நாளும் உடைந்ததில்லை. பக்கப்பாட்டுப் பாடுவதற்கு மூன்று நாலுபேர் நிற்பார்கள். முகட்டு ஓடுகளும் ஒரு நாளும் கிளம்பியதில்லை. அதிபரும் ஒரு நாளும் ஓடி வந்ததில்லை. அவர் உளவியல் தெரிந்தவர். நடப்பது அடிபிடி சண்டையல்லவே! அக்கால மாணவர் ஈடுபாடு அது. இக்கால மாணவர் ஈடுபாடு ஏதோ!

துரை ஹாட்லிக்குப் போன கையோடு அழகையா குடும்பமும் பருத்தித்துறைக்குப் போக வேண்டியதாயிற்று. எனினும் அவர் பழைய பாடசாலையை மறக்கவில்லை. சந்திப்பவரிடம் அது பற்றி விசாரிப்பார்.

யாழ் வளாக உபவேந்தானதும் எம்மோடு நேரடித் தொடர்பு வைத்தார். பழைய மாணவர் சங்கத் தலைவரானார். சாம்பற் குவியலாகக்கிடந்த பாடசாலை தலைதூக்கி நிமிர வைத்தார். கொட்டில்களும், கட்டடங்களும் போட ஏற்பாடு செய்தார். பொது ஸ்தாபனங்களின் உதவியை நாடி தளபாடங்களும் உபகரணங்களும் வந்து குவியச் செய்தார். சங்கத்தைச் செவ்வனே தொழிற்படதக்கதாகப் பலப்படுத்தினார். கொழும்புக் கிளையை புனரமைப்புச் செய்தார். தாய்ச் சங்கமோ என்னுமளவிற்குக் கனடாவிலும் ஒரு சேய்ச்சங்கம் தோன்ற உந்து சக்தியானார். சங்கத்தின் நிதிவளம் ஸ்திரமாயிற்று. மேலதிக ஆசிரியர்களை நியமித்து ஆசிரியப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தார். அவர் கட்குரிய சம்பளத்தைச் சங்கமே பொறுத்து வருகின்றது. விளையாட்டு உபகரணங்கள் அளிக்கப்பட்டன. எத்தனையோ வருடங்களாக நடைபெறாதிருந்த வருடாந்த விளையாட்டு போட்டிகள் பெற்றார் தின பரிசளிப்பு விழாக்கள் பழையபடி உத்வேகத்தோடு நடைபெற்றன. நூலகம் தற்காலிக ஆய்வு கூடங்கள் எல்லாம் அமைக்கப்பட்டன. ஏராளமான நூல்கள் வாங்கப்பட்டன. திறமைசித்தி பெறும் மாணவருக்குப் பரிசில்கள் அளிப்பதற்கு நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

எமது கலைப் பண்பாட்டைப் பொறுத்த வரையில் யாழ்ப் பாணத்தை விட வடமராட்சி பின்தங்கியதாகவும். அதுவும் உடுப்பிட்டிப் பகுதி மிக பின்தங்கியதாகவும் உள்ளது. இது பேராசிரியர் அவர்களின் கணிப்பீடு. எனவே இக் குறைபாட்டை நீக்கும் பொருட்டு பழைய மாணவர் சங்க ஆதரவில் 'நுண் கலைப் பிரிவு' ஒன்றினை ஆரம்பித்து வைத்தார். அதுமட்டுமன்றி அதன் செயற்பாடுகளுக்கு தனது பூரண ஒத்துழைப்புக்களையும் நல்கினார்.

அன்னார் தான் கற்ற கல்லூரிக்கு ஆற்றிய சேவை அளப்பரி யது. 1989. 07. 16-ம் திகதி அன்று இச் சங்கத்தின் தலைவர் பதவியை பொறுப்பேற்று தொடர்ந்து 5 ஆண்டுகள் அப் பதவி யில் இருந்து எம்மை யெல்லாம் வழி நடாத்திச் செல்லும் வேளை யில் 1994. 06. 11 திகதி திடீரென நடுவழியில் எம்மைவிட்டு பிரிந்து சென்றார்கள். இங்கு நிகழ்ந்திருப்பது மரணம் மட்டுந் தான். எம் மனங்களின் பிரிவல்ல,

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பழைய மாணவர் சங்கத்தின ராகிய நாம் இன்று ஒன்றுகூடி இறைவனை பிரார்த்திக்கின் றோம்,

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.



# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின்
# 5-வது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை

காலம்; 1993-11-13 சனிக்கிழமை பி. ப. 2.30 மணி
இடம் : கல்லூரி விளையாட்டு மைதானம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மேற் குறித்த நேரத்தில் தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர் களின் தலைமையில் திரு. கா. நீலகண்டன் அவர்களின் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமாகியது. அத்தருணம் தேச விடுதலைக் காக தமது உயிரினை அர்ப்பணித்த மாவீரர்களுக்காகவும் பொது மக்கள் நினைவாகவும் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

அங்கத்தவர்களின் வரவு 34 ஆக இருந்தது. அன்றைய தினம் வழமைக்கு மாறான பதட்டநிலை நாட்டில் காணப்பட்ட தினால் வழமையிலும் பார்க்க அங்கத்தவர்களின் வரவு மிகக் குறைவாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**தலைமை உரை :**

தலைவர் அவர்கள் தமதுரையில், ஒரு கல்லூரியின் வளர்ச் சியானது அரசாங்கத்தின் நிதியில் தங்கியிராது. அக்கல்லூரியின் பழைய மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பெற்றோர்களின தும் உதவியில் தங்கியிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அக்கல் லூரியை திறம்பட இயக்கி மாணவர்களை சிறந்த பிரசைகளாக்க முடியும். இதற்கு நலன் விரும்பிகளும் தாராளமாக நிதியுதவி வழங்க முன்வரவேண்டும்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக எமது பழைய மாணவர் சங்கத்திற்கு பெரும் பக்கபலமாக இருந்து நிதிஉதவி செய்து வருவது எமது கனடா கிளைச் சங்கமாகும். தற்பொழுது கொழு ம்பிலும் எமது பழையமாணவர்கள் ஓர் கிளைச் சங்கத்தை ஆரம் பித்துள்ளார்கள். அவர்களும் எமது கல்லூரிக்கு தம்மால் ஆன பங்களிப்பை நல்குவார்கள் என நான் நம்புகின்றேன் எனக் கூறி யதுடன் இக் கல்லூரியில் பயிலும் மாணவர்களினதும் அவர்களின் பெற்றோர்களினதும் அபிலாசைகள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்பதே. உண்மையாக தரவுகளை எடுத்துக் கொண் டால் 2% மாணவர்கள் மாத்திரமே பல்கலைக்கழகம் போகின்

றார்கள். அந்நிலையில் எமது கல்லூரியில் மிகுதி 98% மாணவர்களும் வேறு துறைகளில் ஈடுபடுகிறார்கள் மாணவர்கள் கல்லூரியை விட்டு விலகும் பொழுது சுயமாக இயங்கக்கூடிய விதத்தில் ஓர் தொழிற்கல்வியை பெற்றிருக்க வேண்டும் என்பதே எமது சங்கத்தின் நோக்கு ஆகும். அதற்காகவே பலதுறைகளையும் படிப்பிற்சுக் கூடிய விதத்தில் "அழகியல் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்" ஒன்றை ஆரம்பித்தோம் தற்போதைய போர்க்கால சூழ்நிலை காரணமாக தொழில்நுட்பத்தை எம்மால் ஆரம்பிக்க முடியாமல் உள்ளது எமது கலை, பண்பாட்டைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தைவிட வடமராட்சி பின்தங்கியதாகவும், அதிலும் உடுப்பிட்டி மிக பின்தங்கி உள்ள இந்நிலையில் ''நுண்கலைப்பிரிவு'' ஒன்றினை அழகியல் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின்கீழ் இங்கு இயங்கி வருவதை காணக்கூடியதாக உள்ளது. மேலும் எம் மாணவர்களுக்கு தேவையான தொழில் கல்வியை விரைவில் தொடக்கி வைத்து நல்லமுறையில் செயற்படுத்த வேண்டுமென நான் விரும்புகின்றேன். இதே நேரத்தில் இப்படியான எமது திட்டங்களுக்கு பெருநிதியை வழங்கி ஊக்கிவரும் எமது கனடா கிளைச்சங்கத்தினருக்கு இன்று இங்கு சமூகமளித்திருக்கும் அச்சங்கத்தின் தலைவர் திரு. சு, பாலேந்திரன் அவர்கள் ஊடாக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும் எமது மாணவர்களின் கல்வித்தரம் பற்றி யோசிக்க வேண்டிய நிலைக்கு நாம் வந்துள்ளோம் தற்போது சிங்கள மக்கள் தமது பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் கல்வியை ஊட்டுகிறார்கள். அங்கு அதற்கு எதுவித கட்டுப்பாடும் இல்லை. அதனால் இப்போது அவர்களின் பெறுபேறுகள் உன்னத நிலையை அடைந்து வருகின்றது.

1972-ம் ஆண்டிற்கு முன் சிங்கள மாணவர்கள் இருந்த நிலைக்கு இப்போ தமிழ் மாணவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். இப் பின்னடைவை நாங்கள் க. பொ. த. (சா/த), (உ/த) புள்ளிகளில் இருந்து அறியமுடிகிறது எமது சுதந்திரத்தை நாம் அனுபவிக்க வேண்டுமானால் பொருளாதார சுதந்திரம் அவசியம். அதற்கு மனிதவளம் உருவாக வேண்டும். மற்றது கல்வி அழித்தல் இல்லாது பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும் இதற்கு எல்லோரும் பாடுபட்டால் இதனை வெற்றி கொள்ளலாம் என நான் எண்ணுகின்றேன். இந்த முயற்சி வெற்றிபெற இச்சங்கம் மாத்திரமல்ல சகலரும் அர்ப்பணிக்க கடமைப்பட்டுள்ளார்கள். அவர்கள் முயற்சி வெற்றி பெற வேண்டுமென்று நான் ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன். இந்தக் கல்லூரியில் கல்வி

கற்பிக்கும் அதிபர், ஆசிரியர்கள் கல்வியை வளர்ப்பதற்கு செயல்ப் படும் அனைவருக்கும் இச் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித் துக்கொள்ள விருப்புகின்றேன். இந்த சங்கம் தொடர்ந்தும் வளர்ந்து கல்விக்காக பாடுபடவேண்டும் என்பது எனது விருப்பம் மேலும் சபையில் உள்ள அனைவருக்கும் இன்று இங்கு சமூகமளித் தமைக்காக நன்றியையும் நல்லாசிகளையும் கூறிக்கொண்டு விடை பெறுகின்றேன் எனக் கூறி தமது தலைமையுரையை முடித்துக் கொண்டார்.

## நான்காவது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை :

அதனைத் தொடர்ந்து செயலாளரினால் நான்காவது வரு டாந்த பொதுக்கூட்ட அறிக்கை சபையில வாசிக்கப்பட்டு அறிக் கையில் எதுவித திருத்தமும் இன்மையால் அறிக்கை சரியென திருவாளர் இ வி தேவராஜா அவர்களினால் முன்மொழியப்பட்டு திருவாளர் பொ. தருமலிங்கம் அவர்களினால் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

## பொருளாளர் வரவு - செலவு அறிக்கை :

பொருளாளரினால் 1992 யூன் 1-ம் திகதியிலிருந்து 1993 மே 31-ம் திகதி வரையிலான வரவு செலவுக் கணக்கு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது வரவு செலவுக் கணக்கு சரியென திருவாளர் வே தவேஸ்வரன் அவர்கள் முன்மொழிய திருவாளர் தி. யோக சாமி அவர்களால் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## அழகியல் - தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் நுண்கலைப் பிரிவு வரவு செலவு அறிக்கை :

அழகியல் - தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் நுண்கலைப் பிரிவு பொருளாளர் செல்வி சீ. வேலுப்பிள்ளை அவர்களினால் 1992 யூன் 1-ம் திகதியிலிருந்து 1993 மே 31-ம் திகதி வரையி லால வரவு செலவுக் கணக்கு சபையில் சமர்ப்பிக்கப் பட்டது. வரவு செலவுக் கணக்கு சரியென கலாநிதி சி. சிறிசற்குணராசா அவர்கள் முன்மொழிய திருவாளர் வை. மகாதேவன் அவர்களி னால் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## ஆண்டறிக்கை :

அடுத்து 1992-08-01-ல் இருந்து 1993-05-31 வரையிலான செயற்பாடுகள் அறிக்கையாக செயலாளரினால் சபையில் சமர்ப் பிக்கப்பட்டது.

## கல்லூரி அதிபர் உரை :

அதனைத் தொடர்ந்து கல்லூரியின் அதிபர் திரு. ந. அனந்தராஜ் அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்திற்கும் சங்க உறுப்பினர்கும் நன்றியைக் கூறி உரையைத் தொடங்கினார்.

கடந்த மாதம் நடைபெற்ற பெற்றார் ஆசிரியர் சங்கக்கூட்டத்திற்கு 200 வரையிலான பெற்றார்கள் சமூகமளித்தமையானது கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. கல்லூரியின் வளர்ச்சியானது மாணவர்களில் மாத்திரம் தங்கியிருப்பதல்ல பெற்றோர்களினாலும், பழைய மாணவர் சங்கத்தினூடாகவும் முன்னெடுத்துச் செல்லமுடியும் என்பதனை நான் அனுபவரீதியாக இங்கு காண்கின்றேன்.

மேலும் கல்லூரி வளர்ச்சியடைவதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு அதில் ஒன்று கட்டமைப்பான இடவசதி அது இங்கு இல்லாமை பலவகையிலும் பாதிக்கின்றது. அதனை நிவர்த்தி செய்யும் மூகமாக தற்காலிக கொட்டகைகளை ஒரு கட்டமைப்புக்குள் அமைத்து வருகின்றோம். ஏற்ற இடங்களில் புதிய கொட்டகைகள் அமைப்பதற்கு பழையமாணவர்சங்கமும் திட்டப்பணிப்பாளரும் உதவிகளை புரிந்து வருகின்றார்கள். இதற்கு இடம் இன்மையும் ஒரு காரணமாக இருக்கையில் சூழலிலுள்ள மக்கள் அதற்கு நிலங்களை தந்துதவுகிறார்கள்.

அடுத்து தளபாடபிரச்சனை. இது இரண்டாவது பிரச்சனையாகும். இதனை திரு. பொ. வியாகேசு அவர்களின் கல்வி நிறுவன தளபாடங்களையும்' கொட்டகையையும் பாவிப்பதன் மூலம் ஓரளவுக்கு சமாளிக்கக் கூடியதாக உள்ளது. 1992-ம் ஆண்டு இருந்த ஆசிரியர் பற்றாக்குறை. இப்பொழுது மிக கணிசமான அளவு குறைந்துள்ளது திரு. R பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள் ஓய்வுபெற இருப்பதினால் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒரு விஞ்ஞான பட்டதாரியை நியமித்து உதவும்மாறு பழைய மாணவர் சங்கத்தை கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அன்மையில் கல்வித்திணைக்களம் பெருந்தொகையான விஞ்ஞான உபகரணங்களை அனேகமான பாடசாலைகளுக்கு கொடுத்துள்ளார்கள். இது மாகாண அமைச்சரினால் அனுப்பப்பட்டது இப் பொருட்கள் எமது கல்லூரிக்கும் மகளிர் கல்லூரிக்கும் சிதம்பராக் கல்லூரிக்கும் கூட அனுப்பப்படவில்லை இங்கு கூறப்பட்ட மூன்று கல்லூரிகளுமே இராணுவ நடவடிக்கையினால் முற்றாக அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும் இதற்குரிய விளக்கத்தை கேட்ட பொழுது "யானைப்பசிக்கு சோளப் பொரி"

போட்டமாதிரி ஒரு சில பொருட்களை மாத்திரமே தந்தார்கள். மேற் கொண்டு இப் பொருட்களை எடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு சங்கத்தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களை பணிவாக கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இக் கல்லூரியில் நூலக வசதியில்லை. இதனை நிவர்த்தி செய்ய இக் கல்லூரியின் பழைய மாணவன் திரு. செ' துரைராஜா ( ராஜா ) அவர்கள் மைதானத்திற்கு முன்பாகவுள்ள தனது வீட்டைத் தந்துதவியுள்ளார். இந் நூலகத்திற்கு இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் பல நூல்களை தந்துதவினார். இவர்களுக்கு எமது நன்றிகள்.

ஒரு மாணவனுக்கு வாசிப்பு மிக முக்கியமானது. எமது மாணவர்கள் கூடுதலாக தமிழில்தான் வாசிக்கும் நாட்டம் உண்டு அதனால் அவ்வகையான புத்தகங்கள் எமக்கு கிடைப்பதற்கு பழைய மாணவர்சங்கம் உதவவேண்டும். மேலும் எமது கல்லூரி யாழ் இந்துவைப் போன்றோ அல்லது றோயல் கல்லூரி போன்றோ வரவேண்டும் என்று நான் விரும்பவில்லை. எமது கல்லூரியானது பழைய உடுப்பிட்டி அ. மி. கல்லூரியாக வரவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். எமது கல்லூரியில் நல்ல மாணவர்கள் இருக்கின்றார்கள். நல்ல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். நல்ல பெற்றோர்கள் இருக்கின்றார்கள். ஆகவே எமது கல்லூரி எதிர்வரும் காலத்தில் பழைய நிலையை அடையும் என்று கூறி விடை பெற்றுக் கொண்டார்'

**கனடா கிளைச் சங்கத்தலைவர் உரை :**

**அதனைத்** தொடர்ந்து எமது கனடாக் கிளைச் சங்கத் தலைவர் திருவாளர் சு. பாலேந்திரன் அவர்கள் சபையோருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு தமதுரையை ஆரம்பித்தார்

உடு. அ மி கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டத்தில் சமூகமளிக்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இங்கு ப. மா. சங்கம் இவ்வளவு சிறப்பாக இயங்கிவருவதை பார்க்கும்போது நாங்கள் தாய்ச் சங்கத்திற்கு செய்யும் உதவி மிகவும் சிறிதாக இருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. மேலும் தாய்ச்சங்கத்தின் வரவு செலவு அறிக்கையை அனுப்பியதன் பின்னரே எமக்கு கூடிய அங்கத்தவர்களை சேர்க்கக்கூடியதாக இருந்தது என்பதனை இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன். நாம் கனடாவில் நடாத்தும் ''வானவில்'' நிகழ்ச்சிக்கு அமோக ஆதரவு உண்டு. இடவசதி இன்மையால் நூற்

றுக் கணக்கானோரை திருப்பி அனுப்பவேண்டிய நிலை ஏற்படுவது வழக்கமாகும். இங்கு இவ்வவவு நிதி பற்றாக்குறை இருக்குமென் பதை இங்கு வந்ததன் பின்புதான் அறியக்கூடியதாக உள்ளது. அப்படி முன்பே தெரிந்திருந்தால் அந்நிகழ்ச்சியை இரண்டு இடங் களில் நடாத்தி கூடுதலான நிதியை சேகரித்திருக்கலாம் இனி வரும் காலங்களில் சுமுகமான நிலை இருக்குமானால் கூடுதலான நிதியை சேகரிப்பதற்குரிய வழியை ஏற்படுத்தி தாய்ச் சங்கத்திற்கு அனுப்பி வைக்க கனடாக் கிளைச்சங்கம் நடவடிக்கை எடுக்கும் என உறுதி கூறுகின்றேன். என கூறி தமதுரையை முடித்துக் கொண்டார்,

## சங்க யாப்பில் திருத்தத் தீர்மானங்கள் மேல் ஆராய்வு:

1992. 04. 04 -ம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்ட தீர் மானத்திற்கமைவாக திரு. க. சிதம்பரப்பிள்ளை, திரு. ச தில்லை யம்பலம், திரு சி. கனகசபாபதி ஆகியோரைக் கொண்ட உப குழுவினால் சங்க யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளும் பொருட்டு சமர்பிக்கப்பட்ட பின்வரும் சிபார்சுகள் செயலாரினால் பொதுச் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நோக்கங்களும் குறிக்கோளும் பின்வருமாறு விரிவுபடுத்த வேண்டும் என இத்தால் நாம் பிரேரணை ஒன்றை 5 வது வரு டாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

"யாப்பில் கூறிய நோக்கங்களுடன் மேற்படி கல்லூரியின் மாணவர்களினதும், பழைய மாணவர்களினதும் முன்னேற்றம் கருதி ''அழகியல்- தொழில்நுட்பம்'' துறைகளில் பாண்டித்தியம் பெறு வதற்கு சந்தர்ப்பம் உருவாக்கி கொடுக்கப்படும்.

இதற்காக பின்வரும் உபவிதிகள் நடைமுறையில் இருக்கும்

1) எல்லா நிறைவேற்று அதிகாரங்களும் சங்கம் தன்னகத்தே கொண்டிருக்கும்.

2) இவ் நிறுவனங்களை செயற்படுத்துவற்கு உப செயற்குழுக்கள் அமைக்கப்படும். இவ்வுப குழுவில் செயற்குழு அங்கத்தவர்கள் நால்வரும் பொதுச் சபையினால் அல்லது செயற்குழுவினால் மூவ ரும் தெரிவு செய்யப்படுவர். காலியாகும் இடங்களுக்கு செயற் குழுவினால் தெரிவு செய்யப்டுவர்.

3) நிதி தொடர்பான இறுதி தீர்மானங்கள் செயற்குழுவினால் எடுக்கப்படும்.

4) செயற்குழுவினால் உருவாக்கப்படும் நிறுவனங்களில் பயிலுவோர் உடு. அ. மி. கல்லூரி மாணவர் ஆவர். அல்லாதோர் வெற்றிடங்கள் இருப்பின் சேர்க்கப்படுவார். அதிலும் முன்னுரிமை சுற்றாடலில் வசிப்போருக்கு.

இத் திருத்த தீர்மானத்தை பலரும் வரவேற்று தமது கருத்தை தெரிவித்ததுடன் திருவாளர் செ. சூரியகுமார் அவர்கள் சரியென முன்மொழிய திருவாளார் வி. சோதிராசா அவர்களால் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து யாப்பில் திருத்தம் செய்யப்பட்டது.

*1993–09–25*-ம் திகதி நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் செல்வி சீ. வேலுப்பிள்ளை அவர்களால் முன்மொழியப்பட்டு திரு த. இராசரத்தினம் அவர்களால் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏற்றுக்கொள்ளப் பட்டது அதனை பொதுச்சபையின் அங்கீகாரத்துக்காக செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதாவது நிதி ஆண்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 1-ம் திகதி என்பதனை ஜூலை 1-ம் திகதி என மாற்ற வேண்டும் என்பதே.

(பொதுவாக நிதி ஆண்டு என்பது வருட முடிவாகவோ அன்றேல் ஒவ்வொரு கால் ஆண்டாகவோ இருத்தல் வேண்டும். என்ற பொது அடிப்படையில் இம் மாற்றம் செய்யவேண்டி ஏற்பட்டது.)

இத்தீர்மானத்தை சரியென திருவாளர் பொ. தர்மலிங்கம் முன்மொழிய திருவாளர் மு. தங்கராசா அவர்களினால் வழிமொழியப்பட்டு சபையோரினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து யாப்பில் திருத்தம் செய்யப்பட்டது.

## புதிய நிர்வாகசபை உத்தியோகத்தர் தெரிவு :

அதனைத் தொடர்ந்து புதிய ஆண்டிற்கான புதிய உத்தியோகத்தர்களை தெரிவுசெய்யும் முகமாக சபை அதிபர் ந. அனந்தராஜ் அவர்களை தற்காலிக தலைவராக நியமித்து அவர்கள் தலைமையில் தெரிவுகள் ஆரம்பமானது.

முதலில் தலைவர் தெரிவின்போது பேராசிரியர் அ. துரைராசா அவர்களை திருவாளர் வை. மகாதேவன் அவர்கள் முன்மொழிய திருவாளர் சி. கனகசபாபதி அவர்களால் வழிமொழியப்பட்டு மீண்டும் தலைவராக சபையோரினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டார்.

மிகுதி தெரிவுகள் புதிய தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

| பதவி | பிரேரித்து அனுமதிக்கப்பட்டவர் | பிரேரித்தவர் | அனுமதித்தவர் |
|---|---|---|---|
| செயலாளர் : | திரு சீ கனகசபாபதி | கலாநிதி சி சிறிசற்குணராசா | திரு வை மகாதேவன் |
| உப தலைவர்கள் : | திரு க சிதம்பரப்பிள்ளை | கலாநிதி சி சிறிசற்குணராசா | திரு செ சூரியகுமார் |
| | கலாநிதி சி சிறிசற்குணராசா | திரு வே தவேஸ்வரன் | திரு த இராசரத்தினம் |
| பொருளாளர் : | திரு ச தில்லையம்பலம் | திரு செ சூரியகுமார் | திரு சி இராமகிருஷ்ணன் |
| உப செயலாளர் : | செல்வி சீ வேலுப்பிள்ளை | திரு த இராசரத்தினம் | திரு ச தவராசா |
| உறுப்பினர்கள் : | திரு வே தவேஸ்வரன் | திரு தி யோகசாமி | திரு வை மகாதேவன் |
| | திரு வை மகாதேவன் | திரு மு தங்கராசா | திரு ச தில்லையம்பலம் |
| | திரு தி யோகசாமி | திரு இ வி தேவராசா | திரு செ சூரியகுமார் |
| | திரு பொ வியாகேசு | கலாநிதி சி சிறிசற்குணராசா | திரு வே தவேஸ்வரன் |
| | திரு இ பொன்னம்பலம் | திரு செ சூரியகுமார் | திரு வை மகாதேவன் |
| கணக்காளர் : | திரு த அபூர்வசிங்கம் | திரு இ பொன்னம்பலம் | செல்வி சீ வேலுப்பிள்ளை |

இத்தெரிவுகள் யாவும் சபையோரினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**புதிய ஆண்டிற்கான செயற் திட்டங்கள்;**

பின்வரும் செயற் திட்டங்கள் சபையில் விவாதிக்கப்பட்டு சபையோரினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

5-ம் 11-ம் 13-ம் ஆண்டிற்கான பொதுப் பரீட்சைக்கு மாணவர்களை தயார் செய்யும் பொருட்டு மேலதிக பரீட்சைகளை நடாத்தும் பொருட்டு அதற்குரிய கடதாசி மை போன்றவற்றை பழைய மாணவர் சங்கம் வாங்கி வழங்குதல்.

2) க. பொ. த ( உ/த ) மாணவர்களுக்கு மேலதிக ஆசிரியர்களைக் கொண்டு மேலதிக வகுப்புக்களை விடுமுறை நாட்களில் நடத்துதல்.

**வேறு விடயங்கள்:**

1) கலாநிதி சி. சிறிசற்குணராசா அவர்கள் கணக்காளர் திருவாளர் த. அபூர்வசிங்கம் அவர்களின் சேவையை பாராட்டி நன்றி தெரிவித்தார்

2) கலாநிதி சி சிறிசற்குணராசா அவர்கள் கனடா கிளைச் சங்கத் தலைவருக்கு பின்வரும் வேண்டுகோளை தெரிவித்தார்.

அதாவது கனடாவில் தொழிற்கல்வி ரீதியான நூல்களை இங்கு அனுப்பினால் அதில் எந்தத் தொழில் எமது நாட்டிற்கு உகந்ததோ அதனை தெரிவு செய்து அதற்குரிய உபகரணங்களை அனுப்பினால் எமக்கு நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும் என தெரிவித்தார். அதற்கு கனடா கிளைத் தலைவர் ஒப்புக் கொண்டார்.

**நன்றி உரை:**

அடுத்து உதவிச் செயலாளர் செல்வி. சீ. வேலுப்பிள்ளை அவர்கள் தமது நன்றியுரையில்,

தாய்ச் சங்கத்தின் கிளையாகிய கனடா சங்கத்தில் இருந்து வருகை தந்து சிறப்பித்த தலைவர் சு. பாலேந்திரன் அவர்களுக்கும் அவரின் துணை அங்கத்தவர்களுக்கும் நன்றி செலுத்துவதாகவும், அவர்களின் துடிப்பான செயற்பாடுகள் தொடர வேண்டும் என வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த போர்க்கால சூழ்நிலையிலும் அதைவிட எவ்வளவோ வேலைகள் இருந்தும், கடமைக்கு முக்கியமளித்து இங்கு சமுகமளித்து தலைமை தாங்கிய பேராசிரியர் திரு. அ. துரைராசா அவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

எமது கல்லூரி அதிபர் அவர்கள் கல்லூரியின் நிலைப்பாட்டை சபையோருக்கு விளக்கியமைக்காகவும், கலந்து சிறப்பித்தமைக்காகவும் நன்றி தெரிவித்தார்.

செயலாளர் அவர்கள் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் இந்தக் கூட்டத்தை மிகவும் உன்னதமாகவும் சிறப்பாகவும் நடாத்தியமைக்கும், வானவில் நிகழ்ச்சியினை முன்னின்று நல்ல முறையில் நடாத்தி முடித்தமைக்காகவும் சங்க சார்பில் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

பொருளாளர் இல்லாவிட்டால் அதாவது நிதி இல்லாது விட்டால் ஒன்றுமே செய்ய முடியாது. பொறுப்புடனும், பொறுமையுடனும் செயற்பட்டு வருவதற்கு நன்றி தெரிவித்தார்.

நுண்கலைப்பிரிவு இயங்க வீடு வழங்கி உதவிய திரு. வே. தவேஸ்வரன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். நுண்கலைப் பிரிவு இயங்க உதவிய திரு. பாலசிங்கம் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் சிற்றுண்டி தயாரித்து அதனைச் சிறப்பாக பரிமாறிய சாரணர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும் இப் போர்க்கால சூழ்நிலையிலும் தமது கல்லூரியின் மேற் கொண்ட பாசத்தினால் இங்கு வருகை தந்து சிறப்பித்த சகல உறுப்பினர்க்கும் நன்றி தெரிவித்து, நன்றியுரையை முடித்துக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களினால் கல்லூரிக் கீதம் இசைக்கப்பட்டு கூட்டம் மாலை 5-45 மணியளவில் இனிதே முடிவுற்றது.

**விசேட நிகழ்ச்சிகள் :**

அன்றைய தினம் போரினால் ஏற்பட்ட பதட்டமும் அபாயமும் எங்கும் காணப்பட்டமையால் அன்றைய விசேட நிகழ்ச்சிகள் யாவும் இரத்துச் செய்யப்பட்டன.

ஒப்பம் சி. கனகசபாபதி
செயலாளர்

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப்

## பழைய மாணவர் சங்கம்

# ஆண்டறிக்கை

**(1993 - 06 - 01 — 1994 - 06 - 30 வரை)**

தொடர்ந்தும் எமது சங்கத்தின் ஐந்தாவது (5 th) வருடாந்த அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடையும் இவ்வேளையில் எமது செயற்றிட்டங்களுக்கு கருவாய் இருந்து, செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாகத் திகழ்ந்த எமது பேரன்புக்குரிய தலைவர் அவர்கள் இவ்வேளையில் இதனை செவிமடுக்க இங்கு இல்லையே என்பதனை நினைக்கும் பொழுது மிக வேதனையாக உள்ளது. அன்னாரின் குறிக்கோள்கள், அவாக்கள் எப்படிப்பட்டவை என்பதனை சென்ற கூட்ட உரையில் அவர் வெளிப்படுத்தியுள்ளார். அதனை நாம் எமது செயற்பாடுகள் மூலம் தொடர்ந்தும் செயற்பட்டு நிறைவேற்றுவோமாக.

அன்னாரின் வழிகாட்டலில் இக்கால போர்ச் சூழ்நிலையில் எம்மீது சுமத்தப்பட்ட பல பணிகளை முடிந்தவரை கல்லூரியின் வளர்ச்சி கருதி பின்நின்று செயற்பட்டு நிறைவேற்றியுள்ளோம். அச் செயற்பாடுகளின் வடிவங்களை தங்கள்முன் அறிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

**01. அங்கத்தவர் :**

இக் கால எல்லையில் 24 பேர் ஆயுட்கால அங்கத்தவர்களாக சேர்ந்ததுடன் மொத்த ஆயுட்கால அங்கத்தவர் தொகை 163 ஆகும்.

**02. நிர்வாகசபைக் கூட்டங்கள் :**

மாதாந்தம் குறைந்தது ஒரு நிர்வாகசபைக் கூட்டமேனும் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் குறித்த கால எல்லையில் 08 நிர்வாகசபைக் கூட்டங்களும் 02 விசேட நிர்வாக சபைக் கூட்டங்களுமாக மொத்தம் 10 கூட்டங்கள் நடைபெற்றன. உறுப்பினர்களின் வரவு மிகவும் திருப்திகரமாக இருந்ததுடன் புரிந்துணர்வுடன் தங்கள் பங்களிப்பை நல்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிர்வாகசபை அங்கத்தவர்களின் வரவு விபரம் :

| பெயர் | | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பேராசிரியர் அ. துரைராசா | — | 10 | 04 |
| கலாநிதி சி. சிறிசற்குணராசா | — | 10 | 03 |
| திருவாளர் க. சிதம்பரப்பிள்ளை | — | — | — |
| ,, சி. கனகசபாபதி | — | 10 | 08 |
| ,, ச. தில்லையம்பலம் | — | 10 | 09 |
| செல்வி சீ. வேலுப்பிள்ளை | — | 10 | 10 |
| திருவாளர் வே. தவேஸ்வரன் | — | 10 | 10 |
| ,, வை. மகாதேவன் | — | 10 | 07 |
| ,, தி. யோகசாமி | — | 10 | 06 |
| ,, பொ. வியாகேசு | — | 10 | 06 |
| ,, இ. பொன்னம்பலம் (1994 மார்ச் வரை) | — | 06 | 01 |
| ,, மு. தங்கராசா (1994 ஏப்பிரல் இருந்து) | — | 04 | 04 |

## 03. கனடாக் கிளைச் சங்கம் :

அ) கல்லூரிக்கு தேவைப்படும் மேலதிக ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு வேதனம் வழங்கியும், வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு சகாயப் பணமாக மாதாந்தம் தலா ரூபா 500/–ம் மேலதிகமாக வழங்கி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை பாதிப்படையாது பாதுகாத்து வருவது.

இதன் பிரகாரம் மே 1993 இல் இருந்து ஏப்பிரல் 1994 வரையிலான காலப் பகுதியில் ரூபா 32,000/– ஐ வழங்கியுள்ளதுடன். இதுவரை அவர்கள் இதற்காக வழங்கிய மொத்தத் தொகை 144,000/– ஆகும்.

| ஆசிரியர் விபரம் | ஆசிரியர் எண்ணிக்கை | மாத எண்ணிக்கை | வீதம் | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் | 02 | 04 | 1500/– | 12,000/– |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (கீழ்ப்பிரிவு) | 01 | 12 | 750/– | 9,000/– |
| வசதிக்கட்டண ஆசிரியர் | 02 | 11 | 500/– | 11,000/– |
| | | | மொத்தம் | 32,000/– |

ஆ) கல்லூரியின் விஞ்ஞான கூடம் நவீன முறையில் அமைப்பதற்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியாக ரூபா 125,000/- ஐ இவர்களால் அனுப்பப்பட்ட நிதியில் இருந்து வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ளது.

இ) கனடாக் கிளைச் சங்கத்தின் ஆதாவில் கிரிக்கெட் பயிற்சி தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், கிரிக்கெட் மைதானமும் புனரமைக்கப்பட்டு மேலதிக கிரிக்கெட் உபகரணங்களும் வாங்கப்பட்டுள்ளது

மேலும் கிரிக்கெட் பழக்குபவர் ( Coach ) ஒருவரும் நியமிக்கப்பட்டு மாதாந்த வேதனமும் வழங்கப்பட்டு வருகிறது.

| காலம் | வீதம் | தொகை |
|---|---|---|
| மே 93 — ஜூன் 94 | ரூ 1000/- | ரூ 9,000/- |

ஈ) கனடாக் கிளைச் சங்கத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் ரூபா 142,560/- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சகத்திற்கு 1993-07-29-ம் திகதி காசோலை மூலம் வழங்கப்பட்டது.

உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியின் கல்வித் தராதரத்தை மேம்படுத்தும் பொருட்டு இதுவரை அவர்கள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்திற்கு வழங்கப்பட்ட உதவிப் பணம் ரூபா 222 560/- ஆகும்.

உ) 1994 - 02 - 27ம் திகதி அன்று நடைபெற்ற பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் சேவை நலம் பாராட்டு விழாவின்போது கனடாக் கிளைச் சங்கமானது அன்னாருக்கு பொற்பதக்கம் அணிவித்து கௌரவித்தது.

இதற்காக தாய்ச் சங்கமானது கல்லூரி சார்பாகவும். உடுப்பிட்டி மக்கள் சார்பாகவும் கனடாக் கிளைச் சங்கத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**04 சந்தாப் பணம் :**

இக்கால எல்லையில் அங்கத்தவர்களான 24 பேரிடமிருந்து வசூலிக்கப்பட்ட சந்தாப்பணம் ரூபா 2.400/- ஐ இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையில் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 05. கல்வி வளர்ச்சி :

அ) மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை கருத்திற்கொண்டு ஆசிரிய வெற்றிடங்களுக்கு கனடாக் கிளைச் சங்க ஆதர வில் இரு விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களும், ஒரு பயிற்றப்பட்ட கனிஷ்ட பிரிவு (ஓய்வுபெற்ற) ஆசிரியரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆ) ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட பற்றாக்குறை, மற் றும் கல்லூரியில் உள்ள குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து அதனால் கல்லூரிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை அறிக்கை மூலம் சமர்ப்பிக்குமாறு கோரி உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இக்குழு அறிக்கையுடன் கல்வி அதிகாரிகளை சந் தித்து கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இ) ஆண்டு 5, க. பொ த. (சா/த), க. பொ. த. (உ/த) வகுப்புக்களுக்கான விசேட பரீட்சைகள் நடாத்தி. மாண வர்களை பரீட்சைக்குத் தயார் செய்யும் பொருட்டு அச் சுக் கடதாசி, மை, ஸ்ரென்சில் என்பன கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன,

ஈ) கல்வியில் ஆர்வமுள்ள வறிய மாணவர்களுக்கு கல்வி கற் பதற்கு அவசியமான உபகரணங்கள் வாங்கி வழங்கப் பட்டுள்ளன.

உ) க. பொ. த. (உ/த) மாணவர்களுக்கு விசேட வகுப்புக் கள் எமது பழைய கல்லூரி வளவில் அமைந்துள்ள மாடிக் கட்டிடத்தில் 1994 – 03 – 30 ம் திகதி சம்பிரதாய பூர்வ மாக ஆரம்பிக்கப்பட்டு, முண்ணணி ஆசிரியர்களைக் கொண்டு உடுப்பிட்டி அ. மி கல்லூரியிலும், உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியிலும் கற்ற, கற்கின்ற மாணவர் களுக்கு பிரதி புதன்கிழமைகளில் மாலை நேரங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ் வகுப்புக்களை சிறப்பாக நடாத்த ஒத்துழைப்பு நல்கிவரும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு எமது நன்றிகள்.

ஊ) அண்மைக் காலமாக தமிழ் மாணவர்களின் கல்வியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதை கருத்திற்கொண்டு, அதற்கு எவ்வகையில் நிவாரணம் காணலாம் என்பத னைக் கண்டறியும் நோக்குடன் பேராசிரியர் அ. துரை

ராசா அவர்களின் தலைமையில் ஆசிரியர்களுடனான கருத்தரங்கு ஒன்று பழைய மாணவர் சங்க ஆதரவில் நடாத்தப்பட்டது.

எ) முழுமையான விஞ்ஞான கூட உபகரணங்கள் எமது கல்லூரிக்கு வழங்கி உதவுமாறு கோரி வடக்கு, கிழக்கு மாகாணசெயலாளருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏ) இம்முறை க. பொ. த. (சா/த) பரீட்சையில் எமது கல்லூரி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதையிட்டு சங்கம் தனது மகிழ்ச்சியினை கல்லூரி நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியது.

ஐ) மாணவர்களின் கணித அறிவை இலகுவான முறையில் விருத்தியடைய அதற்குரிய உபகரணங்கள் பெரும் பங்களிப்பு வகிக்கின்றன என்பதனை தற்கால ஆய்வுகள் மூலம் காணக்கூடியதாக உள்ளது.

எனவே கணித ஆய்வுகூடம் ஒன்றை நிறுவும்பொருட்டு அதற்குரிய உபகரணங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 06. அடிப்படை வசதிகள் :

அ) உடைந்த கட்டிடத்தில் இருந்து பெறப்பட்ட தளபாடங்களைப் பாவித்து 90 அடி X 18 அடி அளவு கொண்ட ஓட்டுக் கொட்டகை (5 வகுப்பறைகள்) ரூபா 25,025/- செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆ) 50 அடி X 18 அடி அளவு கொண்ட கிடுகுக் கொட்டகை (இரு வகுப்பறைகள்) ரூபா 9028/- செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இ) இரு கொட்டகைகளுக்கு (9 வகுப்பறைகளுக்கு) வயல் மண் போட்டு உயர்த்தப்பட்டது அதற்கேற்பட்ட செலவு ரூபா 22,000 /- ஆகும்.

ஈ) க. பொ. த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடாத்தும் பொருட்டு பழைய கல்லூரியின் மேல் மாடிக் கட்டிடம் புணரமைக்கப்பட்டு, கதவுகள் போடப்பட்டு, 46 கதிரைகளும் திருத்தியமைக்கப்பட்டது. இதற்கு ஏற்பட்ட செலவு ரூபா 5045 /- ஆகும்.

உ) 8 அடி X 4 அடி அளவு கொண்ட 3 கரும்பலகைகள் புதிதாக செய்து கல்லூரிக்கு வழங்கப்பட்டதுடன், கல்லூரியில் உள்ள சகல கரும்பலகைகளும் திருத்தி மை பூசப்பட்டது. இதற்கு ஏற்பட்ட செலவு ரூபா 5968 /- ஆகும்.

**07 பரிசளிப்பு விழா :**

பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் திடீர் மறைவு காரணமாக இரண்டாம் தவணையில் நடைபெற இருந்த பரிசளிப்பு விழா மூன்றாம் தவணைக்கு பிற்போடப்பட்டுள்ளது. இவ்விழாவிற்கு பரிசுப் புத்தகங்கள் வாங்கவென ரூபா 15,000 /- ஒதுக்கப்பட்டுள்ளது.

**08. விளையாட்டுத்துறை :**

அ) கனடாக் கிளைச் சங்க ஆதரவில் கனிஷ்ட கிரிக்கெட் அணி உருவாக்கப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. 1995-ம் ஆண்டில் இவர்கள் சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

ஆ) யாழ் மாவட்ட சுற்றுப் போட்டிகளில் சிரேஸ்ட, கனிஷ்ட உடற்பயிற்சி அணிகள் பங்கு பற்றுவதற்கு வாகன வசதி ரூபா 3500 /- செலவில் செய்து கொடுக்கப்பட்டது.

இ) கால் பந்தாட்டக் காப்பரண் ரூபா 1935 /- செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பனை மரத்தைத் தந்துதவிய திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கு எமது நன்றிகள்.

ஈ) விளையாட்டு உபகரணங்கள், உதைபந்தாட்ட சீருடைகள் ரூபா 7,705 /-க்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

**09. தொழிற் பயிற்சி ; (அழகியல் தொழில் நுட்ப கல்வி நிறுவகத்தின் நுண்கலைப் பிரிவு)**

அ) மேற்படி நுண்கலைப் பிரிவுக்கு பின்வருவோரைக் கொண்ட புதிய உப செயற்குழு தெரியப்பட்டு தொடர்ந்தும் திறம்பட இயங்கி வருகின்றது.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. தி. யோகசாமி |
| செயலாளர் | : | திரு. வே. தவேஸ்வரன் |
| பொருளாளர் | : | செல்வி. சீ, வேலுப்பிள்ளை |

உறுப்பினர்கள் : திரு. வை. மகாதேவன்
திரு. த. இராசரத்தினம்
திரு. இ. திருஞானசுந்தரம்
திரு. கு. இரவீந்திரன்

ஆ) மேற்படி நுண்கலைப் பிரிவின் ஆண்டு விழா 1994-02 27 திகதி அன்று மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது. சகல பிரிவு மாணவர்களும் பங்குபற்றி சிறப்பித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. விழாச் செலவுக்கென ரூபா 8,000 /- சங்கத்தால் வழங்கப்பட்டது.

## 10. வானவில் நிதி நிகழ்ச்சி :

அ) வானவில் நிதி நிகழ்ச்சி 1993 - 09 - 04 ம் திகதி மிகச் சிறப்பாக நடந்தேறியது. இந் நிகழ்ச்சி மூலம் ரூபா 126,370 50 /- ஐ செலவுபோக மிகுதியாக திரட்ட முடிந்ததையிட்டு நிர்வாகசபை உறுப்பினர்க்கும். ஒத்துழைப்பு நல்கிய பொதுமக்களுக்கும், ஒருதொகை நிதியை திரட்டி அனுப்பி உதவிய கொழும்புக் கிளைச்சங்கத்திற்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இது சம்பந்தமான கணக்கறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

ஆ) மேற்படி நிகழ்ச்சி சிறப்புற கௌரவ உதவி வழங்கியோரில் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். அவர்களுக்கு எமது பிரத்தியேக நன்றிகள் உரித்தாகுக.

| கௌரவ உதவி வழங்கியவர்கள் | | வழங்கிய உதவி |
|---|---|---|
| திரு. சிறீபதி அருள்தாஸ் | — | நுழைவுச் சீட்டு அச்சடித்தது |
| திரு தங்கராசா தங்கேஸ்வரன் | — | நிகழ்ச்சி நிரல் விளம்பரம் அச்சடித்தது |
| திரு. ச, இளங்கோ | — | விளம்பரப் பதாகை வரைந்தது |
| திரு. ந. மகாதேவன் | — | உழவு இயந்திரம் மூலம் கதிரை ஏற்றி இறக்கியது |
| திரு. வ. கந்தசாமி | — | 200 வாடகைக் கதிரைகள் தந்துதவியது |
| திரு. நா. கந்தசாமி | — | 100 வாடகைக் கதிரைகள் தந்துதவியது |
| திரு. வே, தவேஸ்வரன் | — | 50 வாடகைக் கதிரைகள் தந்துதவியது |

## 11. கல்லூரி நூலகம் :

எமது முன்னைய சிறப்பு வாய்ந்த நூலகம் அழிக்கப்பட்டபின், அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்லூரி நூலகத்திற்கு முதற் கட்டமாக ரூபா 25,000/- பெறுமதியான புத்தகங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

## 12. பொது நடவடிக்கைகள் :

அ) பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு சேவை நலன் பாராட்டு விழா மிகச் சிறப்பாக 1994 - 02 - 27 ம் திகதி கல்லூரி மைதானத்தில் கொண்டாடப்பட்டது. இதனை உடுப்பிட்டி அ. மி. கல்லூரியினதும், உடுப்பிட்டி மக்களினதும் அனுசரணையுடன் பழைய மாணவர் சங்கம் முன்னின்று நடாத்தியது.

இவ் விழாவில் பேராசிரியர் அவர்களுக்கு கனடாக் கிளைச் சங்கச் சார்பில் பொற் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டது.

உடுப்பிட்டி சந்தியில் இருந்து கல்லூரி மைதானம் வரை சிறந்த அலங்காரம் செய்து, பதாகைகள் தொங்கவிட்டு, வீதி வளைவுகள் அமைத்தும், நிறை கும்பங்கள் வைத்தும் சிறப்பித்த சனசமூக நிலையங்களுக்கு எமது பாராட்டுகள்.

அன்றைய நிகழ்ச்சியை தொகுத்து வீடியோ எடுத்து கௌரவ சேவை வழங்கிய திரு வீடியோ சென்ரர் நிர்வாகி திரு. தி. சிவநாதன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

ஆ) 1993 - 10 - 06 ம் திகதி உலக ஆசிரியர் தினத்தை கல்லூரி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து பழைய மாணவர் சங்கம் மிகச் சிறப்பாக கொண்டாடியது.

இ) எமது கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமான திரு. V. K. நல்லையா (வல்வெட்டி) அவர்களின் மறைவையொட்டி சபை அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியதுடன், 1993 - 11 - 22 ம் திகதி நடைபெற்ற அந்தியேட்டி கிரியையையொட்டி பத்திரிகை வாயிலாக அஞ்சலி தெரிவிக்கப்பட்டது.

ஈ) எமது கல்லூரியின் பழைய மாணவரும், பழைய மாணவர் சங்க தலைவரும், முன்னாள் யாழ் பல்கலைக்கழக உப வேந்தருமான பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் திடீர் மறைவையொட்டி அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றியதுடன், பத்திரிகை வாயிலாக அஞ்சலி தெரிவித் தும், வீதிகள் தோறும் பதாகைகள் மூலம் எம் உணர்வு களை வெளிப்படுத்தியும், இறுதி நிகழ்வுகளுக்குரிய உத விகள், ஒத்தாசைகள் வழங்கியும் சங்கம் தனது இறுதி மரியாதையை செலுத்தியது.

**14. கொழும்புக் கிளைச் சங்கம் :**

மேற்படி கிளைச் சங்கம் அண்மையில் ஓர் நகைச்சுவை நாட கத்தினை நடாத்தி தமக்கோர் நிதியினை சேகரித்து திறம்பட இயங்க ஆரம்பித்துள்ளனர்.

தற்சமயம் சுவிற்சலாந்தில் தங்கி உள்ள எமது உபதலைவர் கலாநிதி சி. சிறிசற்குணராசா அவர்கள் அங்குள்ள பழைய மாண வர்களை ஒன்றிணைத்து கிளைச் சங்கம் ஒன்றினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

**ஒப்பம் சி. கனகசபாபதி**
செயலாளர்

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
# பழைய மாணவர் சங்க
# அழகியல்— தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின்
# நுண்கலைப் பிரிவின்
# 2-வது ஆண்டறிக்கை.

இப்பிரிவு 1992. 10. 05-ம் திகதி எமது சங்கத் தலைவர் பேராசிரியர் அ துரைராசா அவர்களினால் எமது பகுதி மாணவர் களின் கலை வளர்ச்சியை ஊக்குவிக்குமுகமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது. இங்கு வாயப்பாட்டு, நடனம், மிருதங்கம், வயலின் என் பன தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்கப்பட்டு வருகின்றது. வயலின் வகுப்பு ஆரம்பத்தில் நடாத்தி வந்த போதும் ஆசிரியரின் வசதியின்மை காரணமாக தொடர்ந்து நடாத்த இய லாமற் போய்விட்டது. மிக விரைவில் இத்துறையும் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளது. தற்போது வாய்பாட்டில் 27 பேரும், நடன வகுப்பில் 77 பேரும், மிருதங்க வகுப்பில் 23 பேருமாக மொத்தமாக 127 மாணவர்கள் கற்கின்றனர்.

1994-ம் ஆண்டு சித்திரை மாதத்தில் வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் எம் மாணவர்கள் தோற்றி பெற்ற பெறுபேற்று விபரம் பின்வருமாறு.

| துறை | தரம் | தோற்றியோர் | பெறுபேறு விபரம் 1-ம் பிரிவு | 2-ம் பிரிவு | சாதாரணம் | சித்தியின்மை |
|---|---|---|---|---|---|---|
| வாய்ப்பாடு | I | 08 | — | 03 | 05 | — |
| | II | 06 | — | 04 | 02 | — |
| | III | 02 | — | — | 02 | — |
| நடனம் | I | 11 | 02 | 06 | 03 | — |
| | II | 04 | — | 02 | 02 | — |
| | III | 02 | 01 | — | — | 01 |
| மிருதங்கம் | I | 04 | — | 01 | 03 | — |
| | II | 06 | 03 | 01 | 02 | — |

மேற்படி நுண்கலைப் பிரிவின் ஆண்டு விழா 1994 02 27 அன்று மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதற்கு ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எமது நன்றிகள்.

ஒப்பம். வே. தவேஸ்வரன்.
( செயலாளர், நுண்கலைப் பிரிவு )

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய

1993 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01-ம் திகதி தொடங்கி 1994 ஆம் ஆண்டு ஜுன

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| பெறுவனவுகள் | காசு ரூ. | ச. | வங்கி ரூ | ச. |
|---|---|---|---|---|
| 1. 01-06-93 இல் மீதி முன் கொண்டு வந்தது | 2741 | 00 | 339397 | 25 |
| 2. அங்கத்துவப் பணம் | 2400 | 00 | | |
| 3. வானவில் வரவு | 24444 | 50 | | |
| 4. வானவில் கணக்கால் வங்கியில் இட்டது | | | 110015 | 00 |
| 5. பழைய மாணவர் சங்கம் (கனடா கிளை) | 312000 | 00 | | |
| 6. வங்கி ந. மு. கணக்கிலிருந்து காசாக எடுத்தது | 82000 | 00 | | |
| மொத்தம் | 423377 | 50 | 449412 | 25 |

**கொடுப்பனவுகள்**

1. நிலையான வைப்பு இல
2. உடுப். மகளிர் கல்லூரி
   ப. மா. சங்கத்திற்கு
3. வானவில் செலவு
4. கல்லூரி நூல் நிலையத்
   அன்
5. மாணவர்களுக்கான இ
   அப்பியாசக் கொப்பிகள்
   களுக்கான றோனியோ
   ஸ்ரென்சில்-மை ஆகியவ
6. மேலதிக ஆசிரியர்களுக்
   வே
7. துடுப்பாட்ட பழக்குனரு
8. விளையாட்டுகளுக்கான
   உபகரணங்களும். உத
9. (அ) இரு கொட்டகைக
   அமைத்த
   (ஆ) இரு கொட்டகைக
   மண்போட்டு உய
   செலவு
   (இ) மேல்மாடி கட்டிட
   கதிரைகள் திருத்தி
   செ
10. வருடாந்த பொதுக்கூட்
    செ
11. நுண்கலைப் பிரிவுக்கு
    உதவிப் பண
12. பேராசிரியரின் பிரிவுபசா
    விழாச் செ
13. பேராசிரியரின் மறைவை
    யொட்டிய செ
14. பெற்றார் தின விழா,
    கலைப்பிரிவு ஆண்டு வி
    வீடியோ+புகைப்படச்
15. ஆசிரியர் தினச் செலவு
16. கரும்பலகைகள் செய்த-
    திருத்திய செ
17. கூட்ட ஒழுங்கு உதவியா
18. உபசரணை
19. காகிதாதிகள்
20. செக் புத்தகம்
21. வங்கி ந. மு. கணக்கிலி
    எ
22. 01-07-94 இல் மீதி
    முன்கொண்டு செ

## மெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

மாதம் 01-ம் திகதி தொடங்கி 1994 ஆம் ஆண்டு ஜுன் 30-ம் திகதி வரைக்குமான

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| காசு ரூ. ச. | வங்கி ரூ. ச. |
|---|---|
| 2741 00 | 339397 25 |
| 2400 00 | |
| 24444 50 | |
| | 110015 00 |
| 312000 00 | |
| 82000 00 | |
| 423377 50 | 449412 25 |

| கொடுப்பனவுகள் | காசு ரூ. ச. | வங்கி ரூ. ச. |
|---|---|---|
| 1. நிலையான வைப்பு இலங். வங். | | 125000 00 |
| 2. உடுப். மகளிர் கல்லூரி ப. மா. சங்கத்திற்கு | | 142560 00 |
| 3. வானவில் செலவு | 24444 50 | |
| 4. கல்லூரி நூல் நிலையத்திற்கு அன்பளிப்பு | | 25000 00 |
| 5. மாணவர்களுக்கான இலவச அப்பியாசக் கொப்பிகள், பயிற்சிகளுக்கான றோனியோ பேப்பர்-ஸ்ரென்சில்-மை ஆகியவை | 9550 25 | |
| 6. மேலதிக ஆசிரியர்களுக்கான வேதனம் | | 32000 00 |
| 7. துடுப்பாட்ட பழக்குனருக்கு | 2000 00 | 7000 00 |
| 8. விளையாட்டுகளுக்கான உபகரணங்களும். உதவிகளும் | 14310 00 | 3500 00 |
| 9. (அ) இரு கொட்டகைகள் அமைத்த செலவு | 9028 00 | 25025 00 |
| (ஆ) இரு கொட்டகைகளுக்கு மண்போட்டு உயர்த்திய செலவு | 6100 00 | |
| (இ) மேல்மாடி கட்டிடம், கதிரைகள் திருத்திய செலவு | 3555 00 | 1490 00 |
| 10. வருடாந்த பொதுக்கூட்ட செலவு | 6789 00 | |
| 11. நுண்கலைப் பிரிவுக்கு உதவிப் பணம் | 8000 00 | |
| 12. பேராசிரியரின் பிரிவுபசார விழாச் செலவு | 801 00 | |
| 13. பேராசிரியரின் மறைவை யொட்டிய செலவு | 13432 00 | |
| 14. பெற்றார் தின விழா, நுண் கலைப்பிரிவு ஆண்டு விழா வீடியோ+புகைப்படச் செலவு | 4020 00 | |
| 15. ஆசிரியர் தினச் செலவு | 1800 00 | |
| 16. கரும்பலகைகள் செய்த-திருத்திய செலவு | 5968 00 | |
| 17. கூட்ட ஒழுங்கு உதவியாளர் | | 1000 00 |
| 18. உபசரணை | 1486 50 | |
| 19. காகிதாதிகள் | 402 00 | |
| 20. செக் புத்தகம் | | 75 00 |
| 21. வங்கி ந. மு. கணக்கிலிருந்து எடுத்தது | | 82000 00 |
| 22. 01-07-94 இல் மீதி முன்கொண்டு சென்றது | 311691 25 | 4762 25 |
| | 423377 50 | 449412 25 |

# வங்கிகளில் நிலையான வைப்புகள் — சேமிப்புக் கணக்கு
## ( 30 - 06 - 1994 வரை )

1. இலங்கை வங்கி - பருத்தித்துறை கிளை

| | ரூ. | ச. | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| (அ) கணக்கு ஆரம்ப வைப்பு | 500 | 00 | | |
| அங்கத்துவப் பணம் வைப்பு | 12500 | 00 | | |
| மொத்த வட்டி | 3951 | 48 | 16951 | 48 |
| (ஆ) நிலையான வைப்பு | | | | |
| சான்றிதழ் இல. 54475 | 60000 | 00 | | |
| அதற்கான வட்டி | 21600 | 00 | 81600 | 00 |
| (இ) நிலையான வைப்பு | | | | |
| சான்றிதழ் இல. 592943 | 125000 | 00 | 125000 | 00 |
| | | | 223,551 | 48 |

2. தேசிய சேமிப்பு வங்கி -

(அ) நிலையான வைப்பு

(நிலையான வைப்பு
FD/PQ/12M/INS/17/
அதற்கான கூட்டு வட்டி

(ஆ) நிலையான வைப்பு
FD/PQ/12M/17/ITS/8
அதற்கான வட்டி

(இ) பரிசுத்திட்ட நிலையா

(ii) சேமிப்பு வைப்பு : (இல. 1

ஆரம்ப மீதி
பரிசுத் திட்டத்திற்குரிய வ

(i) உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 01 - 06 - 93ம் தி
திகதி வரைக்குமான வரவு - செலவுக் கணக்குகளை உண்மையானதும் சரியானதும் என

ஒ

(ii) மேற்குறிப்பிட்ட யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்சத்தி
கம் 30 - 06 - 94 ம் திகதி வரைக்குமான வரவு - செலவுக் கணக்குகளைப் பரிசீலனை செ
களையும், வரவு - செலவுக் கணக்குகளையும் பதிவேட்டுக் கணக்குகளுடன் ஒத்து இருக்கிற

05 - 08 - 94

(iii) மேற்குறிப்பிட்ட சங்கக் கணக்குகள் நிர்வாகக் குழுவினரால் 06 - 08 - 94 ம் திகதி நடைெ
அங்கீகரிக்கப்பட்டது.

## வைப்புகள் — சேமிப்புக் கணக்குகள் பற்றிய விபரம்
## ( 30 - 06 - 1994 வரை )

ளை

| ச. | ரூ. | ச. |
|---|---|---|
| 00 | | |
| 00 | | |
| 48 | 16951 | 48 |
| 00 | | |
| 00 | 81600 | 00 |
| 00 | 125000 | 00 |
| | 223,551 | 48 |

2. தேசிய சேமிப்பு வங்கி - பருத்தித்துறைக் கிளை

| | ரூ. | ச. | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| (அ) நிலையான வைப்பு | 75000 | 00 | | |
| (நிலையான வைப்பு FD/PQ/12M/INS/17/001) அதற்கான கூட்டு வட்டி | 45119 | 70 | 120119 | 70 |
| (ஆ) நிலையான வைப்பு FD/PQ/12M/17/ITS/86 | 115000 | 00 | | |
| அதற்கான வட்டி | 19550 | 00 | 134550 | 00 |
| (இ) பரிசுத்திட்ட நிலையான வைப்பு | 30000 | 00 | 30000 | 00 |
| | | | 284669 | 70 |

(ii) *சேமிப்பு வைப்பு :* (இல. 1037)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 3028 | 26 | | |
| பரிசுத் திட்டத்திற்குரிய வட்டி | 6093 | 30 | 9121 | 56 |

லூரி பழைய மாணவர் சங்கத்தின் 01 - 06 - 93ம் திகதி தொடக்கம் 30 - 06 - 94-ம்
க் கணக்குகளை உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன்.

ஒப்பம் ச. தில்லையம்பலம்
பொருளாளர்

மெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 01 - 06 - 93ம் திகதி தொடக்
மான வரவு - செலவுக் கணக்குகளைப் பரிசீலனை செய்து தேவையான பற்றுச் சீட்டு
களையும் பதிவேட்டுக் கணக்குகளுடன் ஒத்து இருக்கிறது என உறுதிப்படுத்துகிறேன்.

ஒப்பம் த. அபூர்வசிங்கம்
கௌரவ கணக்காய்வாளர்

நிர்வாகக் குழுவினரால் 06 - 08 - 94 ம் திகதி நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில்

ஒப்பம் சி. கனகசபாபதி
செயலாளர்

## அழகியல்-தொழில்நுட்ப நிறுவகத்தின் நுண்கலைப் பிரிவு
## 1993-06-01 இலிருந்து 1994-06-30 வரையிலான
# வரவு செலவுக் கணக்கு

### வ ர வு

| | | | |
|---|---|---|---|
| 1. | கடந்த வருட கையிருப்பு | | 3,667 50 |
| 2. | பழைய மாணவர் சங்கம் வழங்கியது (ஆண்டு நிறைவு விழாவுக்காக) | | 8,000 00 |
| 3. | மாணவர்களிடம் இருந்து வரவு | | |
| | (அ) பாட்டு | 9,560 00 | |
| | (ஆ) நடனம் | 30,150 00 | |
| | (இ) மிருதங்கம் | 9,145 00 | |
| | | | 48,855 00 |
| | மொத்தம் | | 60,522 50 |

### செ ல வு

| | | | |
|---|---|---|---|
| 1. | வேதனம் வழங்கியது | | |
| | (அ) பாட்டு ஆசிரியருக்கு | 8,062 50 | |
| | (ஆ) நடன ஆசிரியருக்கு | 17,812 00 | |
| | (இ) மிருதங்க ஆசிரியருக்கு | 8.000 00 | |
| | (ஈ) உதவியாளருக்கு | 5.900 00 | |
| | | | 39,774 50 |
| 2. | உபசரணச் செலவு | | 1,455 00 |
| 3. | சுருதிப்பெட்டி வாங்கிய செலவு | | 3,000 00 |
| 4. | காகிதாதிகள் மற்றும் ஏனையவை | | 957 50 |
| 5. | 2 சோடி பாய், விளக்கு வாங்கியது | | 330 00 |
| 6. | ஆண்டு நிறைவு விழாச் செலவு | | 9,809 50 |
| 6, | கையிருப்பு | | 5196 00 |
| | மொத்தம் | | 60,522 50 |

1. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நுண்கலைப்பிரிவின் 1993-06-01 இலிருந்து 1994-06-30 வரையிலான வரவு செலவு கணக்கு உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம். சி. வேலுப்பிள்ளை.
(பொருளாளர்)

2. மேற் குறிப்பிட்ட நுண்கலைப் பிரிவின் 1993-06-01 இலிருந்து 1994-06-30 வரைக்குமான வரவு - செலவு கணக்குகளைப் பரீசீலனை செய்து தேவையான பற்றுச் சீட்டுக்களையும், வரவு- செலவுக் கணக்குகளையும் பதிவேட்டுக் கணக்குகளுடன் ஒத்து இருக்கிறது என உறிதிப் படுத்துகின்றேன்.

1994-08-05.

ஒப்பம். த அபூர்வசிங்கம்
(கௌரவ கணக்காய்வாளர்)

3. மேற் குறிப்பிட்ட நுண்கலைப்பிரிவு கணக்குகள் நிர்வாகக் குழுவினரால் 1994 08-06-ம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

ஒப்பம். சி. கனகசபாபதி
(செயலாளர்)

உடுப்பிட்டி அ. மி. கல்லூரி பழைய மாணவர் சங்கம்

1993 - 09 - 09-ம் திகதி நடாத்திய

'வானவில்' நிதி நிகழ்ச்சி

## கணக்கு விபரம்

| | | |
|---|---|---|
| ★ விற்பனையான நுழைவுச்சீட்டுகள் | 160,315-00 | |
| ★ நிகழ்ச்சிச் செலவு | | 24,444-50 |
| ★ 1994-06-30 க்கு முன் வங்கியிலிட். | | 110,015-00 |
| ★ 1994-06-30 க்கு பின் வங்கியிலிட். | | 16,355-50 |
| ★ இன்னும் வசூலாக உள்ள தொகை | | 9,500-00 |
| | 160,315-00 | 160,315-00 |

1) மேற் குறிப்பிட்ட 'வானவில்' நிதி நிகழ்ச்சி கணக்கு விபரம் உண்மையானதும், சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம் ச. தில்லையம்பலம்
(பொருளாளர்)

2) மேற் குறிப்பிட்ட நிதி நிகழ்ச்சி கணக்கு விபரங்களை பரிசீலனை செய்து நுழைவுச்சீட்டுகளுடனும் பதிவேட்டுக்கணக்குகளுடனும் ஒத்து இருக்கிறது என உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம். த. அபூர்வசிங்கம்
1994-08 05 (கௌரவ கணக்காய்வாளர்)

3) மேற் குறிப்பிட்ட வானவில் நிதி நிகழ்ச்சி கணக்கு விபரம் நிர்வாக குழுவினரால் 1994-08-06-ம் திகதி அங்கீகரிக்கப் பட்டது.

ஒப்பம். சி. கனகசபாபதி
(செயலாளர்)